20.01.2026 O.S 113/2018 பி.வா.சா.1 மிக்கேல் அம்மாள்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்குவிசாரணை தொடர்ச்சி

சர்வே எண்.73/1 ஏ 2 ல் கண்ட சொத்தானது எனக்கு பாத்தியப்பட்ட சொத்திற்கு பட்டா என் பெயருக்கு நான் கட்சி செய்கிறேன் என்றால் சரிதான். உட்பிரிவு செய்யும் போது வாதிகளுக்கு எந்த ஒரு அறிவிப்பும் கொடுக்கவில்லை என்றால் தெரியவில்லை. உட்பிரிவு செய்வதற்கு நான் தான் மனு கொடுத்தேன் என்றால் ஞாபகமில்லை. கீழ்பக்கம் சங்கரன்கோவில் ரோடு உள்ளது என்றால் சரிதான். புல எண். 73/1 ஏ 2–க்கு மேல்பக்கம் புல எண். 73/1 ஏ 1ல் ஒரு பகுதி உள்ளது என்றால் சரிதான். புல எண். 73/1 ஏ 2–க்கு தென்பக்கம் புல எண். 73/1 ஏ 1ல் ஒரு பகுதி உள்ளது என்றால் சரிதான். பாதை உள்ளது. 5.10.2016 ல் வா.சா.ஆ 2 ஏற்பாடு ஆவணம் எனது அப்பா எனக்கு எழுதி கொடுத்தது என்றால் சரிதான். 21.12.2016 தேதியில் எனது அப்பா சீர்திருத்த ஏற்பாடு ஆவணம் ஒன்றை எழுதி கொடுத்தார் என்றால் சரிதான். அந்த ஆவணங்களில் எல்கை மாற்றம் இல்லை என்றும், ஒரே எல்கை மட்டுமே இரண்டு ஆவணங்களில் உள்ளது என சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். என் அப்பா எழுதி கொடுத்த சொத்திற்கு மேற்கில் என் கையிருப்பு புஞ்சை என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த மேற்கு கையிருப்பு புஞ்சை என்பது புல எண். 73/1 ஏ 1–ல் மேற்கு பக்கம் என்றால் சரிதான். நான் சொல்லக்கூடிய தென்பக்க பாதை புல எண். 73/1 ஏ 1–ல் வடபுறம் உள்ளதா, தென்புறம் உள்ளதாக நான் சொல்லுகிறேன் என்றால் எனக்கு எழுதி கொடுத்த ஆவணத்தில் 68 செண்டில் தென்புறம் உள்ளது. புல எண். 73/1 ஏ 2 தவிர்த்து வேறு சொத்தில் எனக்கு பாத்தியம் இல்லை என்றால் சொத்து

உள்ளது புல எண்.73/1ஏ1ல் உள்ளது. அதில் என் அப்பாவிற்கு 10 செண்ட் கையிருப்பாக உள்ளது. வேறு சொத்து எனக்கு இல்லை. ஆதியில் புல எண். 73/1ஏ–ல் தென்பக்கம் 20 செண்டை என் பெரியப்பா பெரிய அந்தோணி தேவருக்கும், அதற்கு தென்பக்கம் உள்ள சொத்தில் வடபாதி எனது தகப்பனாருக்கும், தென்பாதி பெரிய அந்தோணி தேவருக்கும் வாய்மொழியாக பாகபிரிவினை செய்து கொள்ளப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. புல எண்.73/1ஏ–ல் தென்பக்கம் 20 செண்டு போக வடபக்கமுள்ள சொத்தை கீழ்பகுதியில் சாலை இருப்பதால் தென்வடல் அளவு ஆளுக்கு பாதியாக மேற்படியார்களால் பிரித்து கொள்ளப்பட்டது என்றால் சரியல்ல. அதற்கு விரோதமாக புல எண். 73/1ஏ1, 1ஏ2 என உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தென்வடல் அளவுகளில் பாதி அளவில் 1ம் வாதி கிழமேலாக பொலிஅமைத்துஅனுபவித்து வந்தார் என்றால் சரியல்ல. அங்கு பொலி இல்லை. அதற்கு விரோதமாக உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. ஏற்பாடு ஆவணம் மற்றும் சீர்திருத்த ஆவணங்களில் தெற்கு எல்கையாக 1ம் வாதி ஜெபகனி புஞ்சை என சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். வடக்கு எல்கையாக தங்கத்துரை புஞ்சை என சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். வாதிகளின் இடத்தையும் சேர்த்து மோசடி செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் சீர் திருத்த செட்டில்மெண்ட் ஆவணம் எனது தகப்பனரால் எழுதி கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அந்த சீர்திருத்த ஆவணம் நடைமுறைப்படுத்தப்படவில்லை என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் புல எண். 73/1ல் வடக்கில் இருந்து தெற்காக தென்வடல் அடி 108

அடி என் அப்பாவிற்கு ஒதுக்கப்பட்டதாக கூறுவது உண்மையல்ல என்றால் சரியல்ல. 2ம் வாதியின் அப்பா என் பெரியப்பா பெரியஅந்தோணி தேவரிடம் ஈனகிரையத்திற்கு கேட்டதாக நான் சொல்லியிருப்பது எனக்கு நேரில் தெரியுமா என்றால் எனது அம்மா, அப்பா சொல்லி எனக்கு தெரியும். புல எண். 73/1ல் தெற்குபக்கம் செண்டு 21ஐ அதன் உரிமையாளரான பாக்கிய பாண்டியன் என்பவரிடமிருந்து 1ம் வாதியின் தகப்பனார் 1990ம் ஆண்டில் கிரையம் பெற்ற விபரம் அந்த காலகட்டத்தில் என் அப்பாவிற்கு தெரியும் என்றால் என் அப்பாவிற்கு தெரியாது. எப்போது என் அப்பாவிற்கு இந்த விபரம் தெரியவந்தது என்றால் எனது அப்பா எனக்கு ஏற்பாடு ஆவணம் எழுதிய பிறகு தான் தெரியும். 1ம் வாதிக்கு என் பெரியப்பா கிரையம் கொடுத்த விபரமும் என் அப்பாவிற்கு ஏற்பாடு ஆவணம் எழுதிய பின்னர் தெரியவந்ததா என்றால் ஜெபகனிக்கு எழுதி கொடுக்கும் போதே தெரிந்திருக்கும். அந்த ஆவணம் உண்மையானது என்பதால் தான் அதற்கு வடக்கே உள்ள செண்டு 58ஐ பொறுத்து மட்டும் எனது அப்பா ஏற்பாடு ஆவணம் எழுதி கொடுத்தார் என்றால் சரியல்ல. அதன்பிறகு பின்யோசனையோடு வாதியின் சொத்தில் வில்லங்கம் ஏற்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தோடு ஏற்பாடு சீர்திருத்த ஆவணம் ஏற்படுத்தப்பட்டது என்றால் சரியல்ல. என்னுடைய ஏற்பாடு ஆவணம் மற்றும் சீர்திருத்த ஏற்பாடு ஆவணத்திலோ சொத்தின் கிழமேல் தென்வடல் அளவுகள் கொடுக்கப்பட்டுள்ளதா என்றால் கொடுத்துள்ளார்கள். அந்த அளவுபடி தான் உட்பிரிவு செய்யப்பட்டதா என்றால் சரிதான். புல எண். 73/1ல் வடபக்கம் வெப்பலான பூமி என்பதால் எனக்கு அதிகமாக கொடுத்தாக என் முதல்விசாரணை வாக்குமூலத்தில் குறிப்பிடுவது உண்மையல்ல என்றால்

சரியல்ல.  புல எண்.73/1ல் பூமியானது ஒரே வகையான பூமி தான் என்றால் சரிதான்.  வாதிகளின் வழக்கு அனுமதிக்ககூடியது என்றால் சரியல்ல.

(ஒம்)எஸ்.முருகவேல்,
கூடுதல் சார்பு நீதிபதி,
தென்காசி.